# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.22 /2024

dated : 09.09.2025

P.W.1

Name கௌதம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் பி.சி.ஏ படித்துள்ளேன். 08.07.1997 ம் ஆண்டு நான் பிறந்தேன். பிரதிவாதி என் சித்தப்பா ஆவார். 1ம் வாதி என் அத்தை. 2ம் வாதி என் தகப்பனார். வழக்குரை சொத்துக்கள் என் தாத்தா சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்டது. 30.03.2005 ல் அவர் இறந்துபோனார். அவர் இறந்த தேதியில் எங்கள் குடும்ப விவரங்கள் நான் இளவர் என்பதால் தெரியாது என்றால் சரியல்ல. 1வது பட்டியல் சொத்துக்கள் இரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கேயுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் 1வது தபசில் சொத்திற்கானது என்றால் சரிதான். புகைப்படத்தில் கல்தூண் வேலியாக நிர்வப்பட்டு அதில் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் தெற்கே சோளம் பயிரப்பட்டிருப்பதாக காணப்படுகிறது என்றால் சரிதான். நான் தற்போதும் அந்த இடத்தை பார்வையிட்டேன் புகைப்படத்தில் காணப்படுவதை போலத்தான் கிடப்பில் உள்ளது. அந்த புகைப்படத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான் அது என் தாத்தாவின் உடன் பிறந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அமைந்துள்ள வீடு

என்றால் சரிதான். புகைப்படத்தில் காணப்படும் வீட்டிற்கு வடக்கே காணப்படும் பகுதியில் கல்தூண் நடப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். கல்தூண் நடப்பட்ட விவரம் எனக்கு நேரில் தெரியாது. வழக்கிற்கு முன்பு பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியும். அந்த அறிவிப்பில் சொத்துக்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறியுள்ளார். என்னிடம் காட்டப்படும் மற்றொரு புகைப்படத்தில் உள்ள வீடு எங்களுக்கு பாத்தியப்பட்ட வீடு. அந்த வீட்டில் தற்போது பிரதிவாதி குடியிருந்து வருகிறார். அந்த வீடு 2013 ல் கட்டப்பட்டதா என்றால் இல்லை. அந்த 2013 ம் ஆண்டு கட்டப்பட்டது என்றும் அதன் புதுமனை புகுவிழாவில் நாங்கள் கலந்து கொண்டோமா என்றால் இல்லை. அந்த வீடு அமைந்துள்ள விவரத்தை எங்கள் வழக்குரையில் கூறியுள்ளோம். அந்த வீடு யாரால் கட்டப்பட்டது எவ்வளவு விஸ்தீரனத்தில் கட்டப்பட்டது எப்போது கட்டப்பட்டது என்று குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். 2022 ம் ஆண்டு இறுதியில் என் அத்தை பிரதிவாதி மீது சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நானும் பங்கெடுத்துக் கொண்டேன். அந்த விசாரணையில் சமரச முடிவு ஏற்படவில்லை எனவே புளியங்குடி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தின் அறிவுரைப்படி மீண்டும் சொக்கம்பட்டியில் விசாரணை நடந்தது என்றால் சரிதான். மேற்கண்ட விவரங்களை எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒருவர் இறந்த பின்னர் 16 ம் நாள் நிகழ்ச்சியின்போது அவர்கள் சொத்துப் பற்றி பேச்சுவார்த்தை நடக்கும் என்றால் சரிதான் எங்கள்

குடும்பத்தில் நடக்கவில்லை. நான் கூறுவது தவறு என்றும் என் தாத்தா சுப்பிரமணி 30.03.2005 ல் இறந்த 16ம் நாள் நிகழ்ச்சியின் போது அவர்கள் சொத்துக்கள் பற்றி குடும்ப உறுப்பினர்கள் கலந்து பேசி வாய்மொழியாக சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த விவரத்தை பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பில் கூறியிருந்தார் என்றால் சரிதான் ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. 2005 ம் ஆண்டு நடைபெற்ற வாய்மொழி பாகப்பிரிவினை படி 2 ம் பட்டியல் சொத்து பிரதிவாதிக்கு முழுமையாக ஒதுக்கப்பட்டு அவர் பெயருக்கு வருவாய் துறை மற்றும் உள்ளாட்சி துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்குரையில் தற்போது 2ம் பட்டியல் சொத்து யார் பெயரில் பதிவாகியுள்ளது என்று குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். 1,3 பட்டியல் சொத்துக்களில் 1, 2 வாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து அவர்களால் தனிதனியே கல்தூண் அமைத்து தரிசாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் மட்டுமே அவரால் நாளது தேதிவரை விவசாயம் செய்து அவரது தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதிக்கு திருமணமான சில மாதங்களிலேயே என் அப்பா குடும்பத்துடன் சென்னைக்கு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் கணவர் ஆடிட்டர் என்றால் சரிதான் அவர் 1991ல் இறந்துபோனார். நான் பிறந்த இடம் மூணார் நான் வளர்ந்தது சென்னை. நானோ 1ம் வாதியோ நேரில் விவசாயம் செய்ததில்லை என்றால் சரியல்ல. 2005 ம் ஆண்டு குடும்ப வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்ட

பின்னர் நாங்கள் ஒருபோதும் தாவா சொத்திற்கு வந்ததில்லை என்றும் அதில் அனுபவம் ஏதும் செய்ததில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் சொத்துக்களை பொறுத்து ஆவணங்கள் எழுத வேண்டுமென்பதற்காகவே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். வாய்மொழியாக ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் ஆவணம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த புகார் மனு விவரங்களையோ அதில் விசாரணையின்போது நாங்கள் கொடுத்த வாக்குமூலங்களையோ வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை அதுபற்றிய விவரங்களை வழக்குரையில் கூறவும் இல்லை என்றால் சரிதான். அந்த புகாரின் விசாரணைப்படி பிரதிவாதி பத்திரம் எழுதித்தர முன்வராததால்தான் என் தந்தை எங்கள் பெயருக்கு என் தந்தை 2023ம் அன்று செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல அதில் பிரிவின்றி 1/3 பங்கு என்று குறிப்பிட்டிருந்தார் என்றால் சரியல்ல. 1ம் வாதியும் 5ம் வாதிக்கு ஆதரவாக அதே தேதியில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் உள்ள ஊர் பெரியோர் மற்றும் நாட்டாமை உறவினர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு என் மீது பகை ஏதும் இல்லை. 2005ம் ஆண்டிலேயே பிரதிவாதி வாய்மொழி பாகப்பிரிவினையை அனுசரித்து கல்தூண் நட்டி வேலி அமைத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டதன் அடிப்படையில் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்த சொத்தை இரயில்வே துறையினர் நில ஆர்ஜிதம் மூலம் கைப்பற்றிக் கொண்டதால் பிரதிவாதி

அவ்வாறு கைப்பற்றப்பட்ட 10 செண்ட் இடத்திற்கு ஈடாக 1, 2 வாதிகளுக்கு வழங்கப்பட்ட இடத்திலிருந்து தனக்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொண்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினையை நாங்கள் ஒப்புக் கொண்ட விவரம் சொக்கம்பட்டி காவல் நிலைய ஆவணங்களில் துலங்கும் என்றும் அதனால்தான் அந்த விவரங்களை மறைக்கும் விதமாக வழக்குரையுடன் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்குரையிலும் கோரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2005ம் ஆண்டிலேயே குடும்பச் சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினையில் தனிதனியே ஒதுக்கப்பட்டுவிட்டது என்றும் எனவே மீண்டும் ஒருமுறை பாகப்பிரிவினை செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் தற்போது அதை மறுதிரவு செய்யவும் பாகம் கோரவும் எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட 2ம் தபசில் சொத்தை பிரதிவாதி அபிவிருத்தி செய்தும் வீடு கட்டியும், மாட்டு தொழுவும் அமைத்தும் சட்டப்பூர்வமான காலத்திற்கும் மேலாக தனித்த முறையில் அனுபவித்து வருவதால் நாங்கள் பாகம் கோரும் உரிமையை இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல. இரயில்வே ஸ்டேஷனுக்கு தெற்கிலும் எங்களுக்கு சொத்துக்கள் உண்டு அவைகள் இரண்டு ஏக்கர் புஞ்சை நிலமாகும். அந்த சொத்தை என் தாத்தா உயிருடன் இருந்தபோதே விற்றுவிட்டார் அவ்வாறு விற்கும்போது என் அப்பாவும், அத்தையும் சேர்ந்தே விற்றார்கள் என்றால் சரியல்ல.

அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தை என் அத்தையும், என் அப்பாவும், தாத்தாவுடன் சேர்ந்து விற்றார்கள் என்றும் அதனால்தான் மேற்படி சொத்தை இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 10.07.2023 ல் எங்கள் பெயரில் ஆவணங்கள் ஏதும் ஏற்படவில்லை. பிரதிவாதி அறிவிப்பில் பிரதிவாதிக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது என்று கூறியிருந்தார் என்றால் சரிதான். வழக்குரை சொத்தில் ஒரு பகுதியில் மட்டும்தான் சோளம் நடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த சொத்து வாய்மொழி பாகப்பிரிவினையின்படி பிரதிவாதியின் சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்தின் மற்ற பகுதியில் பிரதிவாதி பயிரிடவில்லை என்றால் சரிதான். அவைதான் என் அத்தைக்கும் எங்களுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. விவசாயம் செய்யப்படாமல் தரிசாக உள்ள பகுதிதான் என் அத்தைக்கும் எங்களுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் தற்போதும் 1, 3 சொத்துக்களில் பெயர் மாற்றம் ஏற்படாமல் இருப்பதாலும் சொத்துக்களின் மதிப்பு உயர்ந்துள்ளதாலும் வாய்மொழி பாகப்பிரிவினையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பையும் அதற்கு நாங்கள் அனுப்பிய பதிலறிவிப்பையும் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானோ 1ம் வாதியோ வழக்குரை சொத்துக்களில் பாடுபட்டு அனுபவித்ததில்லை என்றும் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் தனித்து

அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.09 17:56:09 +0530